<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.155/2023</u>

**<u>நாள் : 05.02.2026</u>**

ம.சா. 1 பர்ஷோத்தம் (ஏ) புருசோத்தமன்

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு தமிழ் நன்றாக தெரியும். விபத்தானது திருப்பத்தூர்–வாணியம்பாடி ரோட்டில் நடந்தது. அந்த சாலை தென்வடல் சாலை என்றால் சரிதான். அந்த சமயத்தில் வாணியம்பாடி செல்லவேண்டி கிழக்குபுறமுள்ள பிரிவு சாலையிலிருந்து வந்துகொண்டிருந்தேன் எனறால் சரிதான். நான் வந்த சாலை பால்நாங்குப்பம் பிரிவு சாலை என்றால் சரிதான். திருப்பத்தூர்–வாணியம்பாடி பிரதான சாலையானது இருபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாணியம்பாடி பக்கமிருந்து வந்த வேறொரு இருசக்கர வாகனம் மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் யமஹா இருசக்கர வாகனத்தில் போனேன்.

பால்நாங்குப்பம் பிரிவு சாலை அருகே நின்று சாலையை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. என்மீது மோதிய பஜாஜ் பல்சர் மோட்டார் வாகனத்தின் உரிமையாளரும், ஓட்டுநரும் 1ஆம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. எனது வாகனத்திற்கு இன்சூரன்ஸ் உள்ளது.

1ஆம் எதிர்மனுதாரர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து பாலிசி நிபந்தனைகளை மீறியதால் 2ஆம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என்மீது மோதிய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் என்ற முறையில் 1ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே எனக்கு இழப்பீடு

கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 1ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே ஈடு செய்ய கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் பல்சர் வாகனத்தை ஓட்டிவந்தவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அகர்பத்தி தொழில் செய்து ரூ.25,000/- சம்பாதிப்பதை காட்டும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்வசம் அதற்குண்டான ஆவணங்கள் உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். என்னிடம் வருவாயை காட்டும் ஆவணங்கள் இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாததால்தான் இதுநாள் வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் அருண் மருத்துவமனையில் சிகிச்சை எடுதததுக்கொண்டதற்கான ஒருங்கிணைந்த மருத்துவ பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் advance, return பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு return எதுவும் கொடுக்கவில்லை. ஒருங்கிணைந்த மருத்துவ பில்களை மருத்துவமனையிலிருந்து பெற்று தாக்கல் செய்வதாக சாட்சி கூறுகிறார். நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.